**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.93/2025 – PW- 7**

| | |
|---|---|
| Name | திரு. பில்லா |
| Husband/Father Name | ஜுலியான் |
| Village /Area | பொன்னை |
| Taluk | காட்பாடி |
| Occupation | கூலி |
| Age | 45 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 11.11.2025.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். எனக்கு சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது. என்னை போலீசார் விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது).**

13.01.2016ம் தேதி இரவு பொன்னை காலனியில் உள்ள குளக்கரைக்கு செல்லும் வழியில் உள்ள ஆண்டி சமாதியிடம் அஜீத், ராஜா மற்றும் செல்வா ஆகியோர்கள் பேசிக்கொண்டிருந்ததாகவும், அங்கே ஆஜர் எதிரி டில்லிராஜ் என்பவர் ஏன்டா என்னை பார்த்து சிரிக்கிறாய் என்று கூறி செல்வாவின் கண்ணத்தில் கையால் அடித்ததாகவும், செல்வா டில்லிராஜ் என்பவரை நான் ஏன் உன்னை பார்த்து சிரிக்க போகிறேன் என்று சொல்லியதாகவும், அப்போது ஆஜர் எதிரிக்கும் அஜீத், ராஜா செல்வகுமாருக்கும் இடையே வாய் தகராறு

ஏற்பட்டதகாவும், அப்போது நானும் விஜயக்குமார் என்பவரும் டில்லிராஜையும் அஜீத் என்வரையும் சமாதானப் படுத்தி வீட்டிற்கு அனுப்பியதாகவும், பிறகு அன்றிரவே 10 மணிக்கு அஜீத், ராஜா மற்றும் செல்வா ஆகியோர் பாத்ரூம் செல்வதற்காக குளத்தங்கரைக்கு சென்று அமர்ந்து பேசிக்கொண்டிருந்ததாகவும், அப்போ அங்கு வந்த ஆஜர் எதிரி டில்லிராஜ் செல்வாவை பார்த்து என்னை பார்த்து எதற்காக சிரித்தாய் என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டி கண்ணத்தில் அறைந்ததாகவும் அப்போது அஜித் டில்லிராஜை முறைத்து பார்த்தாகவும், அப்போது டில்லிராஜ் என்னை ஏன்டா முறைக்கிறாய் என்று அஜீத்தின் கண்ணத்தில் அடித்தததாகவும், உடனே அஜீத்தும் டில்லிராஜ் என்பவரை கண்ணத்தில் அடித்ததாகவும், அதற்கு ஆஜர் எதிரி டில்லிராஜ் என்னையே அடித்துவிட்டாயா என்று சொல்லி தன்னுடைய பேண்ட் பாக்கெட்டில் மறைத்து வைத்திருந்த ஆபரேஷன் செய்யும் பிளேடை கொண்டு அசிங்கமான வார்த்தைகளால் திட்டி ஒழிந்து போடான அஜித்தின் இடது பக்க கழுத்து, இடது பக்க மார்பு ஆகிய இடங்களில் பிளேடால் அறுத்ததாகவும், அப்போது தடுக்க சென்ற அமாவாசை மகன் பிரபாகரனை வலது முழங்கையில் காயப்படுத்தியதாகவும், அப்போது அங்கிருந்த ராஜா, செல்வா ஆகியோர் அஜித்தை இரு சக்கர வாகனத்தில் சோளிங்கர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், அஜித் வலியால் துடித்து கொண்டிருந்ததாகவும், ராஜாவும் செல்வாவும் அஜித் சாலை விபத்தில் வண்டியில் இருந்து கீழே விழுந்ததாக சோளிங்கர் அரசு மருத்துவனையில் மருத்துவரிடம் பதட்டத்தில் தவறுதலாக சொன்னதாகவும், டாக்டர் அஜீத் வண்டியில் இருந்து கீழே விழுந்ததாக பதிவு செய்ததாகவும், பிறகு அஜீத்தை மேல் சிகிச்சைக்காக வேலூர்

அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்த்ததாகவும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.11 19:08:27 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.